திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்னாற்காடு ஜில்லாவில், மிராளூர் என்ற இடத்தில் அரசு விவசாயப் பண்ணை ஒன்று இருக்கிறது. அந்தப் பண்ணையில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு, அரசு உத்தரவிட்டும் கூட, குறைந்தபட்சக் கூலி, நிர்ணயம் செய்யப்பெற்றவாறு கொடுக்கப்பெறுவது இல்லை என்பது அரசின் கவனத்திற்கு வந்ததா? அப்படி இருந்தால் என்ன நடவடிக்கையை அரசு எடுத்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு கா. காளிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய தைப்பேன்ற நிலை அரசு ஆணை பிறப்பிக்கப்பெறுவதற்கு முன்பு இருந்தது. மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்து பண்ணைகளுக்கு தகவல் வருவதற்கு காலதாமதம் ஆகிய காரணத்தினால் அப்படி கொடுக்கப்பெறாமல் இருந்தது. இப்போது அப்படிப்பட்ட புகார்கள் நிறைய வந்ததின்பேரில் உடனடியக குறைந்தபட்சக் கூலியை அவர்களுக்கு கொடுக்கப் பெறவேண்டும் என்று எல்ல விவசாயப் பண்ணைகளுக்கும் ஆணை அனுப்பப்பெற்றிருக்கிறது. அப்படி இதுவரையில் கொடுக்காமல் இருந்தால், ஆணை வழங்கப் பெற்ற தேதியிலிருந்து அந்த பாக்கியையும் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவகளே, விவசாயப் பண்ணையில் வேலை செய்கிற தொழிலாளர்களுக்கு குறைந்த பட்ச ஊதியம் என்று நிர்ணயம் செய்யப்பட்டது எல்லா மாவட்டங்களிலும் ஒரே மாதிரியாகவா அல்லது மாவட்டத்திற்கு மாவட்டம் வேறுபட்டிருக்கிறத ? எந்த விதத்தில் என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்திற்கும், மற்றைய மாவட்டங்களுக்கும் வேறுபாடு இருக்கிறது.

போடியிலுள்ள மண்வளப் பாதுகாப்பு அலுவலகம்.

*வினா எண் 533—திரு கே. எம். எஸ். சுப்பிரமணியன் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

போடியில் இருக்கும் மண்வளப் பாதுகாப்பு அலுவலகத்தை இராமநாதபுரத்திற்கு மாற்றுவதற்கு திட்டம் ஏதும் அரசு செயற்குறிப்பில் இருக்கிறதா?